சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-23 |
| சாட்சியின் பெயர் | : | சிவராமன் |
| தந்தை பெயர் | : | அய்யாதுரை |
| கிராமம் | : | மதுரை |
| தாலுக்கா | : | மதுரை |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன், அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

2 முதல் 4, 6, 7, மற்றும் 10 எதிரிகள் ஆஜர். 1, 5, 8, 9, எதிரகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு

கடந்த 2021ம் வருடம் திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் பணியிலிருந்த உதவி ஆய்வாளர் காமாட்சி என்பவரிடம் அ.சா.1 ஜான்சன் என்பவர் கொடுத்த புகாரை பெற்றுள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதன்பின்னர் வழக்கை அ.சா.22 காவல் ஆய்வாளர்புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 15.11.2021ம் தேதியன்று காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை இறந்துபோன குமரேசனின் பிரேதத்தின் மீது திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கு முன்னிலையில் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்யவேண்டி சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வசம் வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

2. பின்னர் அ.சா.ஆ.14 ஆன முதல் தகவல் அறிக்கையிலான வழக்கில் அ.சா.ஆ.21 ஆன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்ட பின்னர் இந்த வழக்கை நான் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென திருவாரூர் மாவட்ட காவல் காணிப்பாளர் அவர்கள் செயல் முறை ஆணை C No. 122/SJ & HR/TVR/2021 dated 15.11.2021 ன்படி இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. அதனை தொடர்ந்து இவ்வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.11.2021ம் தேதியன்று இவ்வழக்கின் சம்பவ இடமான கிடாரங்கொண்டான் சென்று சம்பவ இடத்தினை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.6 குத்புதீன் மற்றும் அ.சா.7 நவாஸ் ஆகியோர்களை விசாரணை

செய்து, ஆய்வாளரிடம் சொன்னதை என்னிடமும் சொன்னதால், நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை, மற்றும் ஆய்வாளர் தயார் செய்த அ.சா.ஆ.15 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.16 ஆன மாதிரி வரைபடம் சரியாக உள்ளதால், தனியாக நான் தயார் செய்யவில்லை.

4. 17.11.2021ம் தேதியன்று இவ்வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரிகளை தேடி மயிலாடுதுறை மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களுக்கு சென்றோம். பின்னர் திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய சரகம் கானூர் சோதனை சாவடி அருகில் சந்தேகத்திற்கிடமாக வந்த நபரை பிடித்து விசாரிக்க மேற்படி நபர், தன் பெயர் 1ம் எதிரி சதீஷ் (எ) சதீஷ்குமார் என்றும், தான் 17.11.2021ம் தேதியன்று கிடாரங்கொண்டானில் நடைபெற்ற குமரேசன் கொலை வழக்கு சம்மந்தமாக தனக்கு உள்ள தொடர்பை ஒப்புக்கொண்டதன் பேரில், எதிரியை கைது செய்து, எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா.8 மாறன் மற்றும் அ.சா.9 பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் காலை 11.10 மணி முதல் 12.10 மணி வரை அதே இடத்தில் பதிவு செய்தேன்.

5. பின்னர் எதிரியுடன் 13.00 மணிக்கு திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம் வந்து, எதிரியை தக்க வழிக்காவலுடன் திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் மூலம் காவலுக்குட்படுத்தினேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளான 4ம் எதிரி பிரேம்குமார், 5வது எதிரி கலைச்செல்வன், 6 வது எதிரி சுரேஷ், 7ம் எதிரி கோபாலகிருஷ்ணன், 10ம் எதிரி வாஞ்சிநாதன், ஆகியோர்களை 17.11.2021ம் தேதியன்று கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்கள்.

6. கடந்த 22.11.2021ம் தேதியன்று இவ்வழக்கு சம்மந்தமாக இவ்வழக்கின் 2வது எதிரியான சூலை (எ) முத்துக்குமார் என்பவரை மாலை 18.30 மணிக்கு எண்கண் முருகன் கோவில் அருகில் கைது

செய்தேன். மேற்படி எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா. 10 சங்கர் மற்றும் அ.சா. 11 வீரமணி ஆகியோர்கள் முன்னிலையில் 08.10 மணி முதல் 09-20 மணி வரை பதிவு செய்தேன். எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன்.

7. சாட்சிகள் அ.சா. 10 சங்கர் மற்றும் அ.சா. 11 வீரமணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். சாட்சிகள் அ.சா.8 மாறன், அ.சா.9 பொய்யாமொழி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

8. கடந்த 24.11.2021ம் தேதியன்று இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில், 4ம் எதிரி பிரேம்குமார், 5ம் எதிரி கலைச்செல்வன், 6வது எதிரி சுரேஷ், 7வது எதிரி கோபாலகிருஷ்ணன், 10வது எதிரி வாஞ்சிநாதன் ஆகியோர்களை இரண்டு நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து தாலுக்கா காவல் நிலையம் கொண்டு வந்து அன்று இரவு எதிரிகள் அனைவரும் பாதுகாப்பாக தங்க வைத்து, 25.11.2021ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு 5ம் எதிரி கலைச்செல்வன் என்பவரை விசாரிக்க, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 06.30 மணியிலிருந்து 07.30 மணி வரை சாட்சிகள் அ.சா.12 அப்துல் பதாக் மற்றும் அ.சா.13 மாதவன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 4ம் எதிரி பிரேம்குமாரை விசாரித்ததில், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 07.45 மணியிலிருந்து 08.45 மணி வரை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

9. பின்பு 7ம் எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 09.00 மணியிலிருந்து 10.00 மணி வரை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். 6வது எதிரி சுரேஷ் என்பவர்

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 10.15 மணியிலிருந்து 11.15 மணி வரை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

10. எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 5 வது எதிரி கலைச்செல்வன் , இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட குமரேசனின் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை தான் மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.15 மணிக்கு எதிரி கொரடாச்சேரி, ஓ.என்.ஜி.சி., அருகில் உள்ள வாய்க்கால் அருகில் மறைத்து வைத்திருந்த சுமார் 69 செ.மீ நீளமுடைய இரும்பு வாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் அப்துல்பதாக் மற்றும் மாதவன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.26** ஆகவும், அந்த இரும்பு வாள் **சா.பொ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.10 ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. சம்பவத்தின்போது எதிரிகள் பயன்படுத்திய இரு சக்கர வாகனமான **TN 50 X 8499 என்ற Hero Honda Splunder plus** என்ற வாகனத்தை சம்பவ இடத்திலிருந்து தப்பி செல்லும்போது கண்கொடுத்தவணிதம் என்ற இடத்திற்கு அருகில் பழுதடைந்து விட்டதால், மேற்படி வாகனத்தை அங்கேயே விட்டுவிட்டு அந்த வழியாக வந்த TN 50 AD 8321 என்ற பதிவெண் கொண்ட Honda Dio என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை வழிமறித்து எதிரிகள் வாகனமான TN 50 X 8499 என்ற Hero Honda Splunder plus என்ற வாகனத்தை அங்கேயே விட்டுவிட்டு TN 50 AD 8321 என்ற வாகனத்தில் தப்பி சென்று விட்டனர். எதிரிகள் விட்டு சென்ற வாகனத்தை கொரடாச்சேரி காவல் நிலையத்தில் குற்ற எண் 591/2021 என்ற வழக்கில் மீட்டு உள்ளனர். அந்த வாகனமான TN 50 X 8499 என்ற Hero Honda Splunder plus என்ற

வாகனத்தை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அந்த TN 50 X 8499 என்ற Hero Honda Splunder plus வாகனம் **சா.பொ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வாகனத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. எதிரி கலைச்செல்வனை காவலில் எடுத்து விசாரணை செய்த போது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 25.11.2021ம் தேதியன்று 12.45 மணிக்கு கொரடாச்சேரி ஔவையார் தியேட்டர் எதிரில் உள்ள கருவை காட்டினுள் மறைத்து வைத்திருந்த இரு சக்கர வாகனத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.29** ஆகவும், அந்த TN 50 AD 8321 என்ற பதிவெண் கொண்ட Honda Dio என்ற இரு சக்கர வாகனம் **சா.பொ.12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.12 ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. பின்னர் 4ம் எதிரி பிரேம்குமார் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், கொலைக்கு பயன்படுத்திய ஆயுதம் மற்றும் இரு சக்கர வாகனத்தை 14.15 மணிக்கு திருவாரூர் நாகை பைபாஸ் ரோடு, மதுரா நகர் அருகில் உள்ள புளியந்தோப்பு முட்புதரில் மறைத்து வைத்திருந்ததை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த TN 50 J 5514 என்ற TVS Sports என்ற இரு சக்கர வாகனத்தையும், சுமார் 43.5 செ.மீ நீளமுடைய வளைந்து நெளிந்திருக்கும் பிச்சுவா கத்தி ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.31** ஆகவும், அந்த TN 50 J 5514 என்ற TVS Sports என்ற இரு சக்கர வாகனம் **சா.பொ.13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பிச்சுவா கத்தி **சா.பொ.14** ஆகவும் குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.13 மற்றும் சா.பொ.14 ஆகியவைகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. பின்னர் 7 வது எதிரி கோபாலகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 14.45 மணிக்கு திருவாரூர் நாகை பைபாஸ் ரோடு, மதுரா நகர் அருகில் உள்ள புளியந்தோப்பு முட்புதரில் மறைத்து வைத்திருந்ததை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சுமார் 42 செ.மீ நீளமுடைய முன் பகுதி வளைந்த அருவாள் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.33** ஆகவும், அந்த சுமார் 42 செ.மீ நீளமுடைய முன் பகுதி வளைந்த அருவாள் ஒன்று **சா.பொ.15** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.15 ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. பின்னர் 6 ம் எதிரி சுரேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 15.15 மணிக்கு திருவாரூர் நாகை பைபாஸ் ரோடு, மதுரா நகர் அருகில் உள்ள புளியந்தோப்பு குப்பை மேட்டில் மறைத்து வைத்திருந்ததை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சுமார் 43 செ.மீ நீளமுடைய முன் பகுதி வளைந்த அருவாள் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.35** ஆகவும், அந்த சுமார் 42 செ.மீ நீளமுடைய முன் பகுதி வளைந்த அருவாள் ஒன்று **சா.பொ.16** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.16 ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.36** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. இவ்வழக்கின் 10 ம் எதிரி வாஞ்சிநாதன் கொடுத்த வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளுடனும், கைப்பற்றிய தடயங்களுடனும், நிலையம் வந்து இவ்வழக்கின் சட்டப்பிரிவினை U/s. 341, 324, 506 (2), 302, of

IPC @ 120 (b), 341, 324, 506(2), 302 r/w 109 and 3(2)(v) of SC/ST (PoA) Act. @ 147, 148, 120 (b), 341, 324, 506(2), 302, 109 and 3(2)(v) of SC/ST (PoA) Act. ன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.37** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன். 27.11.2021 ம் தேதியன்று சாட்சிகள் அப்துல்பதாக், மாதவன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

17. சாட்சிகள் பகத்சிங், அருண், மணிகண்டன், பிரவீன், ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு எதிரியான நந்தகுமார் என்பவரை 10.01.2022 ம் தேதியன்று இவ்வழக்கு சம்மந்தமாக விசாரிப்பதற்காக இரண்டு நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து திருவாரூர் தாலுக்கா நிலையம் கொண்டு வந்து இரவு தங்க வைக்கப்பட்டு 11.01.2022 ம் தேதியன்று மேற்படி எதிரியை சாட்சிகள் கண்ணன் தேவேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நிலையத்தில் வைத்து விசாரிக்க எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.30 மணி வரை பதிவு செய்தேன். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கொலை செய்ய பயன்படுத்திய ஆயுதத்தை மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில், எதிரியுடன் புறப்பட்டு 12.00 மணிக்கு கொரடாச்சேரி ஔவையார் தியேட்டர் எதிரில் உள்ள கருவை காட்டில் எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த 66 செ.மீ நீளமுடைய வீச்சரிவாள் ஒன்றும் மற்றும் 59.1/2 செ.மீ உள்ள வீச்சரிவாள் ஒன்றையும், ஆக இரண்டையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.38** ஆகவும், அந்த சுமார் 66 செ.மீ நீளமுடைய வீச்சரிவாள் -1ம் மற்றும் 59.1/2 செ.மீ உள்ள வீச்சரிவாள் ஒன்றும், **சா.பொ.17 மற்றும் சா.பொ.18** ஆகவும் குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ.17 மற்றும் சா.பொ.18 ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.39** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18. பின்னர் சாட்சிகள் கண்ணன், தேவேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். கடந்த 17.01.2022 ம் தேதியன்று இவ்வழக்கு சம்மந்தமாக இவ்வழக்கில் காயம்பட்ட சுசீலா என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சை அளித்த மருத்துவர் நித்யா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-40** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் இறந்து போன குமரேசன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் நவீன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.

19. இவ்வழக்கு தடயங்களை இரசாயன பரிசோதனை செய்த வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் சிவகுமார் அவர்களை விசாரணை செய்து இரசாயன பரிசோதனை அறிக்கையை பெற்றேன். இவ்வழக்கில் இறந்துபோன குமரேசனின் பிரேதத்தை இரசாயன பரிசோதனைக்குட்படுத்திய சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலம் எடுத்து சென்ற காவலர் சுப்பிரமணியன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

20. சாட்சி ரவிச்சந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.01.2022 ம் தேதியன்று இவ்வழக்கில் சாட்சிகளான ஜான்சன், பூபேஷ், சுசீலா ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.01.2022 ம் தேதியன்று திருவாரூர் வட்டாட்சியர் அன்பழகன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன

குமரேசன், காயமுற்ற சுசீலா, ஜான்சன் ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ்களை பெற்றேன். இவ்வழக்கின் 2 ம் எதிரி, 4 ம் எதிரி, 5 ம் எதிரி, 6 ம் எதிரி, 10 ம் எதிரி, ஆகியோர்களுக்கு ஜாதி சான்றிதழ்களை வழங்கிய வட்டாட்சியர் ராமச்சந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஜாதி சான்றிதழ் பெற்றேன்.

21. இவ்வழக்கின் 3 ம் எதிரிக்கு ஜாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் கவிதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஜாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ. 41** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் 7 ம் எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு ஜாதி சான்றிதழ் வழங்கிய பட்டுக்கோட்டை வட்டாட்சியர் கணேஷ்வரன் என்பவரை விசாரித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஜாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ. 42** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

22. கடந்த 26.01.2022 ம் தேதியன்று இவ்வழக்கின் தடய்ப பொருட்களை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த காவலர் சுதாகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் காமாட்சி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் விசாரணையை மேற்கொண்ட ஆய்வாளர் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

23. கடந்த 27.01.2022 ம் தேதியன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 147, 148, 120 (b), 341, 324, 506(2), 302, 109 , 34 of IPC and 3(2)(v) of SC/ST (PoA) Act. ன்கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்ப வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.43** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

24. கடந்த 29.01.2022 ஆம் தேதியன்று இவ்வழக்கில் 1 ம் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய பாபநாசம் வட்டாட்சியர் செந்தில்குமார்

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாதி சான்றிதழ் பெற்றேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 8ம் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய மதுரை தெற்கு வட்டாட்சியர் கோபாலகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ. 44** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 9ம் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய மானாமதுரை வட்டாட்சியர் தமிழரசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ. 45** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25. கடந்த 09.03.2022ம் தேதியன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 9ம் எதிரி சங்கர் என்பவர் மதுரை மத்திய சிறைச்சாலையில் வேறொரு வழக்கில் சிறைவாசியாக இருந்தவரை பி.டி. வாரண்ட் மூலம் கைது செய்து தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

26. கடந்த 14.03.2022ம் தேதியன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 3ம் எதிரி தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி விட்டார் என்பதை தெரிந்து கொண்டேன். இவ்வழக்கில் எதிரிகள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் மற்றும் சாட்சிகளின் விசாரணைகளின் அடிப்படையில் முன்னதாக வினோத் என்ற நபர் இவ்வழக்கில் எதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவருக்கு எதிராக சாட்சிகள் எவரும் இல்லாத காரணத்தினால் அவரை இவ்வழக்கிலிருந்து நீக்கரவு செய்து அறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.46** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 14.03.2022ம் தேதியன்று எதிரிகள் மீது ச/பி. 147,

148, 120 (b), 341, 324, 506(2), 302, 109 r/w 34 of IPC and 3(2)(v) of SC/ST (PoA) Act. இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று நீதிமன்றத்தில் கூறியிருந்தால் அது தவறு. சாட்சியங்கள் கூறியுள்ளதை தான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் சொன்ன தேதியில், நேரத்தில்,சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், அவர்கள் தானாக எந்தவித ஒப்புதல் வாக்குமூலங்களையும் என்னிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் தடய பொருட்கள் அனைத்தும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.06 15:45:51 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.